**கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை - திரு.சு.பொன்னுசுவாமி, பி.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,டி.எல்.எல்.ஏ.,டி.பி.எம்.ஐ.ஆர்.,**

**சுருக்கம்**

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.கே.எஸ்.திவ்யா, இளநிலை உதவியாளர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம், கோவை - இளநிலை உதவியாளர் பதவியில் 07.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/4251/2021 நாள்- 07.12.2021.

**படிக்கவும்**

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்-14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் - 20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.1022/PSD-G2/2019, நாள் - 18.02.2019.
4. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/16386/2020-1, நாள் - 29.07.2020.
5. கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் கடிதம் எண். அ/416/2020, நாள்-06.12.2021.
6. கோவை, தொழிலாளர் இணை ஆணையர் கடிதம் எண். அ2/5379/2021, நாள். 07.12.2021.

------------

**ஆணை-**

மேலே 3 -ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி திருமதி.கே.எஸ்.திவ்யா, என்பவர் சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர், பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு மாநில சார்நிலைப்பணி விதிகளின் பொது விதி 10 (ஏ) (1)-ன் படி பணியமர்த்தப்பட்டு 07.08.2020 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேலே 6 -ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தனியர் பணியில் சேர்ந்து ஓராண்டு காலம் முடிவடைவதாலும் தனியரது பணிக்காலத்தில் முறையற்ற விடுப்புகள் துய்க்கப்படவில்லை என்றும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும் தெரிவித்து தனியருக்கு 07.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யலாம் என கோவை, தொழிலாளர் இணை ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

தனியரது பணிப்பதிவேடு பரிசீலனை செய்யப்பட்டதில் தனியரது ஓராண்டு பணிக்காலத்தில் முறையற்ற விடுப்பு ஏதும் துய்க்கவில்லை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என அறியவருகிறது.

எனவே, மேலே 5 மற்றும் 6 -ல் படிக்கப்பட்ட கடிதங்களில் பரிந்துரைக்கப்பட்டதின் அடிப்படையில் இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 07.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது. பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

Scanned by CamScanner

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Service Examination – IV for the year 2018 – 2019 and 2019-2020."

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்டதன் விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

(ஒம்/-xxxxxxxxx)
கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
கோவை.

<u>பெறுநர்</u>
திருமதி.கே.எஸ்.திவ்யா,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம், கோவை (உரியவழியாக).

<u>நகல்</u>
1) தொழிலாளர் இணை ஆணையர், கோவை.
2) தொழிலாளர் உதவி ஆணையர், கோவை } (பணிப்பதிவேடு (1) கட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெறப்பட்டமைக்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)
3) பணிப்பதிவேடு / முக்கிய ஆணைத் தொகுப்பு.

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது-</u>
தொழிலாளர் ஆணையர், சென்னை-06.

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 7/12/2021
7.12.2021

Scanned by CamScanner